ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2462/32 - 2025 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2025.11.14

*2462/32 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### பதவிகள் - வெற்றிடம்

### வடமேல் மாகாண சபை மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மேலதிக மாகாண பணிப்பாளர் மற்றும் விடயம் தொடர்பான விசேட பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்

வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடமாக காணப்படுகின்ற மேலதிக மாகாண பணிப்பாளர் மற்றும் விடயம் தொடர்பான விசேட பதவிக்காக நியமிப்பதற்கு வடமேல் மாகாண பிரதம செயலாளரின் பரிந்துரை மற்றும் கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரத்திற்கமைய தற்போது அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற இலங்கை மிருக உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் 1 ஆம் தரத்திலான உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. தகைமைகள் :

மேலதிக மாகாணப் பணிப்பாளர் :

- இலங்கை மிருக உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் 1 ஆம் தரத்தில் 03 வருட காலம் சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவையைக் கொண்ட உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.
- மிருக மருத்துவத்தில் அடிப்படை பட்டம் பெற்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1A - PG 7346 — 04 (2025/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

- 2025.11.30 ஆந் திகதிக்கு ஆட்சேர்ப்புக்குத் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விடயம் தொடர்பான விசேட பதவி :

- இலங்கை மிருக உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் 1 ஆம் தரத்தில் 03 வருட காலம் சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவையைக் கொண்ட உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.

- விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

- 2025.11.30 ஆந் திகதிக்கு ஆட்சேர்ப்புக்குத் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியாகும் போது இத் தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன், மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகள் உறுதிப்படுத்துகின்ற அனைத்து சான்றிதழ்களினதும் மற்றும் தேசிய அடையாள அட்டையில் தன்னால் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப்படும் முறை:

வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களது அங்கீகாரத்துடன் வடமேல் மாகாண ஆளுநரது செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படுகின்ற நேரடி நேர்முகப்பரீட்சையில், பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் தகுதி வரிசையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.

3. விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல் :

அனைத்து விண்ணப்பப்படிவங்களையும் (மாதிரி படிவம் www.psc.nw.gov.lk என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்) நேர்த்தியாகவும் சரியாகவும் பூர்த்தி செய்து 2025.11.30 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு திணைக்களத் தலைவர் மற்றும் உரித்துடைய அமைச்சின் செயலாளர் ஊடாக (மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவராயின் உங்களது விண்ணப்பப்படிவத்தை மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதம செயலாளரின் பரிந்துரையுடன் அனுப்ப வேண்டும்) "ஆளுநரது செயலாளர், ஆளுநரது அலுவலகம், மாளிகாவ, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவத்தை இடுகின்ற கடித உறையின் இடது மேல் மூலையில் "வடமேல் மாகாண மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் பதவி மற்றும் விடயம் தொடர்பான விசேட பதவிக்கான விண்ணப்பம் கோரல்" என்று குறிப்பிடப்பட வேண்டும். குறித்த திகதிக்கு பின் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள், பூர்த்தியற்ற விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு குறித்த தகைமை வழங்கப்படாத விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காலதாமதம் அல்லது காணாமல் போதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகளும் வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்படமாட்டாது.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக இங்கு குறிப்பிடப்படாத விடயங்கள் குறித்து முடிவுகளை எடுக்கும் அதிகாரம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநருக்கு உண்டு.

இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பதிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால் சிங்கள பதிப்பே மேலோங்கும்.

இப்பதவிக்காக சேர்த்துக் கொள்வது தொடர்பான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநரிடமே உள்ளது.

வடமேல் மாகாண கௌரவ ஆளுநரது கட்டளைப்படி,

டப். ஜீ. டப். வனசிங்க,
ஆளுநரது செயலாளர்,
ஆளுநரது அலுவலகம்,
வடமேல் மாகாணம்.

2025, நவெம்பர் 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக மாத்திரம்

(✓ குறியீட்டை இடவும்)

மேலதிக மாகாண பணிப்பாளர் பதவி ☐

விடயம் தொடர்பான விசேட பதவி ☐

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையில் மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் மேலதிக மாகாண பணிப்பாளர் மற்றும் விடயம் தொடர்பான விசேட பதவிக்காக ஆட்சேர்ப்பு**

"அ" பகுதி

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/ தமிழ்) : திரு./திருமதி/செல்வி ..........................................................
..........................................................................................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :Mr./Ms./Mrs. ......
..........................................................................................................

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்):.............................
..........................................................................................................

1.4 ஆண்/பெண் தன்மை : ☐

பெண்-F ஆண்-M (உரிய குறியீட்டை பெட்டியினுள் குறிப்பிடவும்.)

1.5 பிறந்த திகதி : ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

1.6 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

02. 2.1 நிரந்தர முகவரி :..........................................................................................
..........................................................................................................

2.2 அலுவலக முகவரி (சிங்களத்தில்) :..........................................................................

2.3 தொலைபேசி இலக்கம் :அலுவலக :........................................... தனிப்பட்ட :...............................................

03. 3.1 தற்போதைய பதவி :..........................................................................................

3.2 வகுப்பு அல்லது தரம் :..................................

3.3 அப்பதவிக்காக நியமிக்கப்பட்ட திகதி:.............................

3.4 2025.11.30 ஆந் திகதிக்கு அப்பதவியில் தொடர் சேவைக் காலம் :..........................................................

3.5 முன்னைய சேவை விபரங்கள் :

| அமைச்சு/ திணைக்களம்/ நிறுவனம் | கால அளவு | | உத்தியோகத்தர் வகித்த பதவி | பதவி உரித்துடைய தரம் |
|---|---|---|---|---|
| | திகதி தொடக்கம் | திகதி வரை | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

04. கல்வித் தகைமைகள் :

4.1 முதுகலை பட்டம்/ முதுகலை பட்டம் டிப்ளோமா/ அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் பயின்ற முகாமைத்துவ படிப்பு (06 மாதத்திற்கு மேற்பட்ட) பெயர் :..........................
..........................................................................................................

4.2 பல்கலைக்கழகம் / நிறுவனம் :..........................................................................................................................

4.3 அந்த முதுகலைப் பட்டம்/ முதுலைப் பட்டம் டிப்ளோமா பூர்த்தி செய்யப்பட்ட திகதி :.............................................
...........................................................................................................................................................

5. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்கு தெரிந்தளவில் உண்மையானவையும் சரியானவையும் என்றும், இதன் எப்பகுதியாவது பூர்த்தி செய்யாமல் அல்லது பிழையாக பூர்த்தி செய்வதால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் நான் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

..................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :........................

---

"ஆ" பகுதி

**விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையின் பொறுப்புடைய உயர் அதிகாரியின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி :.........................

01. 1.1 முந்தைய 05 ஆண்டுகளில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றுள்ளார்/ பெறவில்லை.

| ஆண்டு | ஆண்டு சம்பள உயர்வு பெற்றுள்ளார்/ பெறவில்லை | செயல்திறன் நிலை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

1.2 சம்பள உயர்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தால், அதற்கான காரணம் மற்றும் அது ஒத்திவைக்கப்பட்ட காலம்.........
...........................................................................................................................................................
...........................................................................................................................................................

02. கடந்த 5 ஆண்டுகளில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்/ இல்லை/
நீங்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால், அது பற்றிய தகவல்கள்

| ஆண்டு | உரிய ஒழுங்கு நடவடிக்கை | அதன் தற்போதைய நிலை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

(குற்றப்பத்திரிகைகள்/ ஒழுக்காற்று உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தால், அவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல்களை இணைப்பது கட்டாயமாகும்.)

03. அரசாங்க சேவை ஆணைக்குழு சபை சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி ஒழுக்காற்று தண்டனை எடுக்கப்படடுள்ளது/ எடுக்கப்படவில்லை.

04. நீதிமன்றத்தால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார்/ தீர்ப்பளிக்கப்படவில்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

05. அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமையின் கீழான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது/ செய்யப்படவில்லை.

06. அவரது/ அவளுடைய விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் இந்தத் திணைக்களத்தில் உள்ள பதிவுகளுடன் பொருந்துகின்றன என்பதை நான் சான்றளிக்கின்றேன்/ சான்றளிக்கவில்லை.

............................................
உயர் அதிகாரியின் கையொப்பம்,
பெயர் :...........
பதவி முத்திரை :.....................

திகதி :..............................

---

"இ" பகுதி

நிறுவன/ திணைக்களத் தலைவரின் சான்று:

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள............ உத்தியோகத்தரின் சுய கோவையை பரிசீலித்தது பற்றியும் அதன்படி அத் தகவல்கள் சரியானது என்றும் உறுதிப்படுத்துவதுடன், இந்த உத்தியோகத்தரினால் 2025.11.30 ஆந் திகதிக்கு கடந்த ஐந்தாண்டுகளில் தொடர்ச்சியாக மகிழ்ச்சிகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், அக்காலத்தினுள் குறித்த சம்பள உயர்வுகளை பயன்படுத்தி உள்ளதாகவும், எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உள்ளாகவில்லை என்றும், இவருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் மற்றும் எதிர்காலத்தில் அவ்வாறான செயல்பாடுகள் எடுப்பதற்கு கருதவில்லை என்றும், உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவிக்காக உத்தியோகத்தர் தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிப்பதற்கு இணங்குகின்றேன்.

.....................
நிறுவன/ திணைக்களத் தலைவரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :........................

---

அமைச்சின் செயலாளரின் பரிந்துரை :

....................................
அமைச்சு செயலாளரின் கையொப்பம்
பெயர் :
பதவி முத்திரை :

திகதி :....................

---

மாகாண பிரதம செயலாளரின் சிபாரிசு :(மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம்)

........................
மாகாண பிரதம செயலாளரின் கையொப்பம்
பெயர் :
பதவி முத்திரை :

திகதி :...........................

**மேலதிக மாகாண பணிப்பாளர் பதவி (திருத்தப்பட்டது)**
**மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் (வடமேல் மாகாணம்)**
**நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்குவதற்கான நடைமுறைத் திட்டம்**

01 சிரேஷ்ட நிலைக்கான அதிகபட்ச புள்ளிகள் 40

| *தர நிர்ணயம்* | *தர நிர்ணயம் தொடர்பான விபரங்கள்* |
|---|---|
| சிரேஷ்ட நிலைக்கான அதிகபட்ச புள்ளிகள் 40 | I ஆம் தரத்தில் 03 ஆண்டு காலத்திற்கு மேலதிகமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள I ஆம் தரத்தில் சேவைக் காலத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும்.<br>அதிகபட்ச மேலதிக சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தருக்கு சிரேஷ்ட நிலைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள மொத்த புள்ளிகளும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு விகிதாசார அடிப்படையில் மேலதிக சேவைக் காலத்திற்கான புள்ளிகளும் வழங்கப்படும்.<br>உதா - ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சேவை விதிமுறைகளது சிரேஷ்ட நிலைக்கு 40 புள்ளிகளும் மற்றும் விசேட திறமைக்கு 60 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அதிகமாக மேலதிக சேவைக்காலம் பணிபுரிந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு மொத்த புள்ளிகள் 40 வழங்கப்பட வேண்டும்.<br><br>அந்த உத்தியோகத்தரின் சேவைக்காலம் 05 ஆண்டுகளாயின்,<br>ஒரு ஆண்டிற்கு 08 புள்ளிகள்<br>06 மாதத்திற்கு 04 புள்ளிகள்<br>03 மாதத்திற்கு 02 புள்ளிகள்<br>என்றவாறு மற்ற உத்தியோகத்தர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.<br>* "சேவைக்காலம்" என்பது "சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம்" எனக் கருதப்படும். |

**02. திறமைக்காக அதிகபட்ச புள்ளிகள் 60**

| | | |
|---|---|---|
| (அ) செயல்திறன் இலக்குகளை அடைதல் | i. கடந்த 05 ஆண்டுகளில் திருப்திகரமான செயல்திறன் (ஆண்டுக்கு 01 புள்ளி)<br>ii. கடந்த 05 ஆண்டுகளில் சராசரிக்குமேல் செயல்திறன் (ஆண்டுக்கு 02 புள்ளிகள்)<br>iii. கடந்த 05 ஆண்டுகளில் சிறந்த செயல்திறன் (ஆண்டுக்கு 03 புள்ளிகள்) | ஆகக் கூடியது 15 புள்ளிகள் |
| (ஆ) பதவியில் கடமைகளைச் செய்வதற்கு பெற்றுள்ள அனுபவம் மற்றும் நிபுணத்துவம் | i. (அ) பிரதி மாகாண பணிப்பாளர்/ பிரதி பணிப்பாளர் பதவிகளில் கடமை புரிந்திருத்தல்<br>ஒரு ஆண்டிற்கு 02 புள்ளிகள்படி ஆகக்கூடியது 05 ஆண்டுகளுக்காக<br>(ஆ) விடயம் தொடர்பான விசேட பதவிக்காக கடமை புரிந்திருத்தல் ஒரு ஆண்டிற்கு 03 புள்ளிகள்படி (15 புள்ளிகள்)<br>ii. மேலதிக மாகாண/ பணிப்பாளர் பதவியில் கடமை மேற்கொள்ளல்/ கடமைகளை நிறைவேற்றுதல்/ கடமைகளை மேற்பார்வை செய்வதற்காக<br>ஒரு ஆண்டிற்கு ஆகக்கூடியது 05 புள்ளிகள்<br>06 மாதத்திற்கு மேற்படுமாயின் 03 புள்ளிகள்<br>06 மாதத்திற்கு குறைவாயின் 01 புள்ளி (05 புள்ளிகள்) | ஆகக் கூடியது 20 புள்ளிகள் |
| (இ) கல்வித் தகைமைகள்<br>(புள்ளிகள் வழங்கப்படுவது ஆகக் கூடிய ஒரு தகைமைக்கு மாத்திரமாகும்.)<br>ஆட்சேர்ப்பு அல்லது உயர்வுக்கு கருதப்படும் உயர் கல்வித் தகுதிகள் இதன் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது. | i.முதுகலைப் பட்டம் (10 புள்ளிகள்)<br>ii. முதுகலைப் பட்டம் டிப்ளோமா (08 புள்ளிகள்)<br>iii. அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் 06 மாதங்களுக்கு மேலாக முடிக்கப்பட்ட முகாமைத்துவப் பயிற்சி படிப்பு (ஒரு தகைமைக்கு மட்டும்)<br>(06 புள்ளிகள்) | ஆகக் கூடியது 10 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| (ஈ) திணைக்களத்தின் பதவிகளுக்கு அளிக்கப்பட்ட சிறந்த பங்களிப்பு | i. கடமை தொடர்பான விசேட பணிகள் (திணைக்களத் தலைவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்) ஒரு செயல்பாட்டிற்கும் 02 புள்ளிகள் படி (06 புள்ளிகள்)<br>ii. பெறப்பட்ட பாராட்டு கடிதங்ள் (230பீ பொது படிவத்தினால் வழங்கப்பட்ட) /சேவை மதிப்பீடுகள் (தனிப்பட்ட கோப்பு மூலம் நிரூபிக்கப்பட்டது) ஒரு கடிதத்திற்காக 02 புள்ளிகள்படி (04 புள்ளிகள்) | ஆகக் கூடியது 10 புள்ளிகள் |
| (உ) நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை | ஆளுமை/ முகம்கொடுக்கும் விதம்/ பதில் அளிப்பதில் காட்டப்படும் திறமை | ஆகக் கூடியது 05 புள்ளிகள் |

**விடயம் தொடர்பான விசேட பதவி (திருத்தப்பட்டது)**

**மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் (வடமேல் மாகாணம்)**
**நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்குவதற்கான நடைமுறைத் திட்டம்**

01 சிரேஷ்ட நிலைக்கான அதிகபட்ச புள்ளிகள் 40

| *தர நிர்ணயம்* | *தர நிர்ணயம் தொடர்பான விபரங்கள்* |
|---|---|
| சிரேஷ்ட நிலைக்கான அதிகபட்ச புள்ளிகள் 40 | I ஆம் தரத்தில் 03 ஆண்டு காலத்திற்கு மேலதிகமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள I ஆம் தரத்தில் சேவைக் காலத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும்.<br>அதிகபட்ச மேலதிக சேவைக் காலத்தைக் கொண்ட உத்தியோகத்தருக்கு சிரேஷ்ட நிலைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள மொத்த புள்ளிகளும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு விகிதாசார அடிப்படையில் மேலதிக சேவைக் காலத்திற்கான புள்ளிகளும் வழங்கப்படும்.<br>உதா - ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சேவை விதிமுறைகளது சிரேஷ்ட நிலைக்கு 40 புள்ளிகளும் மற்றும் விசேட திறமைக்கு 60 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அதிகமாக மேலதிக சேவைக்காலம் பணிபுரிந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு மொத்த புள்ளிகள் 40 வழங்கப்பட வேண்டும்.<br><br>அந்த உத்தியோகத்தரின் சேவைக்காலம் 05 ஆண்டுகளாயின்,<br>ஒரு ஆண்டிற்கு 08 புள்ளிகள்<br>06 மாதத்திற்கு 04 புள்ளிகள்<br>03 மாதத்திற்கு 02 புள்ளிகள்<br>என்றவாறு மற்ற உத்தியோகத்தர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.<br>* "சேவைக்காலம்" என்பது "சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம்" கருதப்படும். |

**02. திறமைக்காக அதிகபட்ச புள்ளிகள் 60**

| | | |
|---|---|---|
| (அ) செயல்திறன் அலக்குகளை அடைதல் | i. கடந்த 05 ஆண்டுகளில் திருப்திகரமான செயல்திறன் (ஆண்டுக்கு 01 புள்ளி)<br>ii. கடந்த 05 ஆண்டுகளில் சராசரிக்கு மேல் செயல்திறன் (ஆண்டுக்கு 02 புள்ளிகள்)<br>iii. கடந்த 05 ஆண்டுகளில் சிறந்த செயல்திறன் (ஆண்டுக்கு 03 புள்ளிகள்) | ஆகக் கூடியது 15 புள்ளிகள் |
| (ஆ) பதவியில் கடமைகளைச் செய்வதற்கு பெற்றுள்ள அனுபவம் மற்றும் நிபுணத்துவம் | i. (அ) பிரதி மாகாண பணிப்பாளர்/ பிரதி பணிப்பாளர் ஒரு ஆண்டிற்கு 03 புள்ளிகள்படி ஆகக்கூடியது 05 ஆண்டுகளுக்காக (15 புள்ளிகள்)<br>(ஆ) விடயம் தொடர்பான விசேட பதவிக்காக கடமை மேற்கொள்ளல்/ மேற்பார்வை/ கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு ஆண்டிற்கு ஆகக்கூடியது 05 புள்ளிகள்<br>06 மாதத்திற்கு மேற்படுமாயின் 03 புள்ளிகள்<br>06 மாதத்திற்கு குறைவாயின் 01 புள்ளி | ஆகக் கூடியது 20 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| (இ) கல்வித் தகைமைகள்<br><br>(புள்ளிகள் வழங்கப்படுவது ஆகக் கூடிய ஒரு தகைமைக்கு மாத்திரமாகும்.) ஆட்சேர்ப்பு அல்லது உயர்வுக்கு கருதப்படும் உயர் கல்வித் தகுதிகள் இதன் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது. | i.முதுகலைப் பட்டம் (10 புள்ளிகள்)<br>(10 புள்ளிகள்)<br>ii. முதுகலைப் பட்டம் டிப்ளோமா (08 புள்ளிகள்)<br><br>iii. அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் 06 மாதங்களுக்கு மேலாக முடிக்கப்பட்ட முகாமைத்துவப் பயிற்சி படிப்பு (ஒரு தகைமைக்கு மட்டும்) | ஆகக் கூடியது 10 புள்ளிகள் |
| (ஈ) திணைக்களத்தின் பதவிகளுக்கு அளிக்கப்பட்ட சிறந்த பங்களிப்பு | i. கடமை தொடர்பான விசேட பணிகள் (திணைக்களத் தலைவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்)<br>ஒரு செயல்பாட்டிற்கும் 02 புள்ளிகள் படி (06 புள்ளிகள்)<br><br>ii. பெறப்பட்ட பாராட்டு கடிதங்ள் (230பீ பொது படிவத்தினால் வழங்கப்பட்ட) /சேவை மதிப்பீடுகள் (தனிப்பட்ட கோப்பு மூலம் நிரூபிக்கப்பட்டது) ஒரு கடிதத்திற்காக 02 புள்ளிகள் படி)<br>(04 புள்ளிகள்) | ஆகக் கூடியது 10 புள்ளிகள் |
| (உ) நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமை | ஆளுமை/ முகம்கொடுக்கும் விதம்/ பதில் அளிப்பதில் காட்டப்படும் திறமை | ஆகக் கூடியது 05 புள்ளிகள் |

EOG 11 - 0111

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.